

ஸ்ரீ மீனுட்சி ஆத்தன்குடி

மணமலர்

ஆத்தன்குடி
ஸ்ரீ மீனுட்சிசுந்தரேசுரர் பதிகம்

யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் மாணுக்கர்
சிவத்திரு சொக்கலிங்க ஐயா இயற்றியது.

விளக்கியவர் :
சிவத்திரு " தத்புருஷ தேசிகர் "

வெளியிடுவோர்:
கா. அரு. கா
"திருமகள் இல்லம்" ஆத்தன்குடி

ஆத்தன்குடி
ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசுரர் பதிகம்

சொக்கலிங்க ஐயா இயற்றியது

செல்வன் : கா. திருஞானசம்பந்தன்

செல்வி : சோலைச்சி

கலியாண நாள்

பரிதாபி - தை - 5. 18-1-1973

கா. அரு. கா.

'திருமகள் இல்லம்' ஆத்தன்குடி

உ
சிவமயம்

வாழ்த்துகிறேன்

என் அருமை நண்பர் ஆத்தன்குடி கா. அரு. கா. காடப்ப செட்டியார் அவர்கள் தம் மைந்தன் திருஞானசம்பந்தன் திருமண நினைவாக இந் நூலை வழங்கி மகிழ்கிறார்கள். திருமணத்தில் நூல் வெளியிடுவது அவர்கட்குப் புதிதன்று. அவர்கள் மக்கட்கு முன்னே நடந்த இரண்டு திருமணங்களில் நான் தொகுத்துக்கொடுத்த இரண்டு நூல்களை வழங்கியதாக என் நினைவு.

இன்று வரும் நூல், தமிழிலும் சிறப்பாகச் சைவ சித்தாந்தத்திலும் பெரும்புலமை பெற்று, காரைக்குடியில் நிறை வாழ்வு வாழ்ந்து, சிவம் பெருக்கிய புண்ணிய சீலர் இராம. சொக்கலிங்க ஐயா அவர்கள் ஆத்தன்குடியில் கோயில் கொண்டிருக்கும் இறைவன் மீது பாடிய சந்தப் பதிகப் பாடல்களும் இறைவிமேல் பாடிய கலித்துறைப் பாக்களும் கொண்டது. பாடல்கள் ஐயா அவர்களின் புலமைக்கு எடுத்துக் காட்டு.

தெய்வப்பற்று நிறைந்த காடப்பனாரின் பிறந்த ஊர்ப்பற்றையும் பாராட்டுவோம்.

என் மீது பேரன்பு கொண்ட காடப்பரையும் அவர் தம் வாழ்க்கைத்துணைவி சிகப்பி யாரையும் மக்களையும் எல்லாம் வல்ல தில்லைக் கூத்தன் அருளால் பல்லாண்டு பல்லாண்டு சிறப்புற்றுயர வாழ்த்துகிறேன்.

ராய. சொ.

மணமக்களுக்கு வாழ்த்து

திங்கள்முடிப் பெருமானுர் தழுவும் அம்மை
திருவருளால் ஆத்தனகர் சிறக்க வாழ்வோன்

நங்களன்புக் காடப்ப நல்லோன் அன்ஞேன்
நாடுமனே யானமுத்துக் கருப்பி நங்கை

தங்கள்தவத் திருஞான சம்பந் தன்றன்
தகுமணேயாம் சோலேச்சி சார மேவும்

மங்கலநல் வாழ்க்கையினில் வளங்கள் எல்லாம்
வாய்க்கவென மனமகிழ்ந்து வாழ்த்து வோமே.

நலமே தழைக!

'' தத்புருஷ தேசிகர் ''

★

உ
சிவமயம்
சண்முகநாதன் துணை.

வாழ்த்துரை

உள்ளன்பு தோய்ந்த தெய்வப் பற்றும் இனிமை நுகரும் தமிழன்பும் நிறைந்த என் அம்மான் திரு. கா. அரு. கா. காடப்பச் செட்டியார் அவர்கள் விசேட நிகழ்ச்சிகளில் நல்ல நூல்கள் வெளியிட்டு வழங்கி மகிழ்வார்கள். இப்பொழுது அவர்கள் மகன் நிறைநாட்செல்வன் திருஞானசம்பந்தன் திருமணத்தில் இந்நூலை வெளியிட்டுச் சிவபுண்ணியப் பேறு பெறுகிறார்கள். திருமணம் கொள்ளும் நிறைநாட்செல்வன் திருஞானசம்பந்தனும் திருவளர் செல்வி சோலைச்சியும் எல்லா நலன்களும் நிறையப் பெற்று நீடு வாழ்வார்களாக என்று நெஞ்சாரச் சிந்தித்து என் ஆன்ம நாயகன் ஸ்ரீ பாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தியநாதப் பெருமான் திருவடிகளை வணங்கி வாழ்த்துகிறேன்.

வாழ்க மணமக்கள்! வளர்க அன்பு!!

சைவமும் தமிழும் தழைத்து இனிது ஓங்குக!

25 - 12 - 72
'தமிழகம்'
பலவான்குடி.

குமஃ. சு. சுப்பிரமணியன்

உ

சிவமயம்

அண்ணுமலையார் துணை

பதிப்புரை

ஆத்தன்குடியில் வாழ்ந்து வருகின்ற மேன்மை தங்கிய நகரத்தார்களால் அழகாகவும் பெரியதாகவும் சிவன்கோயில் அமைக்கப்பெற்று, நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் (விபவ-1928) குடமுழுக்குச்செய்யப்பெற்றது. அப்போது காரைக்குடியில் சைவ சித்தாந்தப் பெரும் செல்வ ராகவும், அழுத்தமான சைவப்பற்று உடையவர் களாகவும், ஆழ்ந்த தமிழ்ப்புலமை உடையவர் களாகவும் வாழ்ந்திருந்த உயர்திரு: சொக்கலிங்க ஐயா அவர்கள் ஆத்தன்குடி ஸ்ரீ மீனுட்சி சுந்த ரேசுரர் சந்தப் பதிகம் ஒன்றும், ஆத்தன்குடி ஸ்ரீ மீனுட்சி அம்மை கலித்துறைப் பதிகம் ஒன் றும், இயற்றித் தந்தது, ஆத்தன்குடி நாவுக்கரசு நற்சபை வெளியீடாக வெளிவந்தது.

பதிகங்களின் பாடல்கள் பொருள் நிறைந் தனவாக இருக்கின்றபடியால், படிப்பவர்களுக் குத் தெளிவாகப் பொருள் விளங்க வேண்டும் என்று கருதிப் பொருள் விளக்கத்துடன் இவ் விரண்டு பதிகங்களேயும் அச்சிட்டு வெளியிட எண்ணினேன்.

ஐயா அவர்களின் பதிகங்களுக்கு, அவர் களின் நன் மாணவரில் ஒருவராகிய தேவ கோட்டை சிவஸ்ரீ "தத்புருஷ தேசிகர்'' "பால கவி" வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார்

அவர்களிடம் என் விருப்பத்தைத் தெரிவித்த பொழுது அவர்கள் மகிழ்ச்சியுடன் விளக்க உரையை எழுதித் தந்தார்கள்.

என் மகன் திருவளர் செல்வன்: திருஞான சம்பந்தன் கலியாண நாளாகிய இன்று, இந்த நூலை உங்களுக்கு அன்புடன் வழங்குகின்றேன். இன்று மணம்பெறும் செல்வன்: திருஞான சம்பந்தன், செல்வி: சோலைச்சி இருவரும் ஸ்ரீ மீனுட்சி சுந்தரேசுரர் திருவருளால் எல்லா நலன்களும் பெற்று வாழும் வண்ணம் வாழ்த்தி அருள வேண்டுகிறேன்.

உங்கள் அன்பிற்கு உரிய,

"திருமகள் இல்லம்"
ஆத்தன்குடி
பரிதாபி: தை: 5

கா. அரு. கா.
காடப்ப செட்டியார்

ஆத்தன்குடி மீனாட்சி சுந்தரேசுரர் சந்தப் பதிகம்

காப்பு

திருவாழும் ஆத்தன்நகர்ச்
செல்வவணி கேசர்

தருகோயில் மேவிஅன்பர்
தங்கட்(கு) — ஒருவாத

சித்திஎலாம் தந்(து)அருளும்
சித்தி விநாயகன்தாள்

பத்திமலர் தூவிநமப்
பாம்.

திருமகள் வாழுகின்ற ஆத்தன்குடியில் உள்ள தனவணிக நகரத்தார்கள் அமைத்த திருக்கோயிலில் எழுந்தருளி இருந்து, குறைவில்லாத வரங்கள் அனைத்தையும் வழங்கி அருளுகின்ற, சித்தி விநாயகப் பெருமானது திருவடிகளைப் பக்தியுடன், மலர் தூவி, வணங்குவோம்.

நூல்

1 கங்கை வான்மதி கொன்றை மாலை
மணந்து(ஒ) ரோர்பொருள் காட்டும் முடியினன்,
அங்கண் வாழ்வு மிகும்,த னதிபர்
அன்பு கூர்திரு ஆத்தன் நகர்அமர்
மங்கை தாய்உமை பங்கின் மேவி
வயங்க வாழ்மனை வாழ்க்கை நிலையினில்
தங்கி யே,அருள் சுந்த ரேச
பதங்கள் நாள்தொறும் ஏத்தல் புரிகுவாம்.

கங்கையும், மேலான பிறைத் திங்களையும், கொன்றை மாலையையும், அணிந்து, அவற்றால் ஒவ்வொரு தத்துவத்தை விளக்கும் திருமுடியை உடையவனாய், நல்வாழ்வு கொண்டு உள்ள அன்பு மிக்க தனவணிகர் உறையும் ஆத்தன்குடிப் பதியில் அமர்ந்து, இளம் பருவத்தினளும் தாயும் ஆகிய உமை அம்மையின் பங்கிலே வீற்றிருந்து, மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் இல்வாழ்க்கை நிலையில் பொருந்தி, அருள்புரியும் சுந்தரேசப் பெருமானது திருவடிகளை நாள்தோறும்ஏத்துவோம்.

2 கனகமழை இனிதுபொழி தனவணிகர்
நிறையும்மலர் காட்டு சோலைகள்
அனவரதம் மதுமழைபெய்(து) அவிர்கொடைமை
தெரியநிகழ் ஆத்தன் மாநகர்
தனில்உரிய பொருள்மழைபெய்(து) இனிதுபுரி
தரும்உரிமை சாற்று கோயிலின்
மனம்விழைபு கயல்விழியொ(டு) உறைபரனை
அனுதினமும் வாழ்த்து வாம்அரோ.

நிறைந்த மலர்களை உடைய சோலைகள் நாள் தோறும்தேன்மழையைப் பெய்து,பொருள் மழையை இனிமையுடன் பொழிகின்ற தனவணிகர்களது, மேலான கொடைத்திறம் தெரியும்படி நிகழுகின்ற ஆத்தன்குடியில் சிவபுண்ணியத்துக்கு உரியதாகிய பொருள் மழையைப் பெய்து, இனிமையுடன் அமைத்து உரிமை பாராட்டுகின்ற திருக்கோயிலில், மன விருப்பத்துடன் அங்கயற்கண்ணம்மை உட னிருக்க வீற்றிருக்கின்ற முதற்கடவுளை நாள் தோறும் வாழ்த்துவோம்.

3 ஆத்தன்நகர் என்றநாமம் வாய்த்ததுஇ(து)அன்றி ஏனை
ஆற்றஇல(து) எனப்ப ரமனும்
ஆத்தன்மகிழ் தந்து வாழ ஏத்துதன வந்தர்ஆசை
யால்பெரிது (இ)யற்றும் எழில்சேர்
சீர்த்திதிகழ் கின்ற கோயில் ஏர்த்தகயல் அங்கண்மாது
சேக்கும்மெய்இ டத்தன் அடியார்
சீர்த்துரிய இன்பம் மேவ ஆர்த்துசிவ சுந்த ரேச
தீர்த்தன்அடி யைப்ப ரசுவாம்.

''ஆத்தன் நகர்'' என்ற திருப்பெயர் வாய்த்தது, இந்த ஒருபதியை அன்றி மற்று வேறு எங்கும் இல்லை என்று எண்ணிப் பரமசிவனுகிய ''ஆத்தன்'' என்னும் திருப்பெயரைத் தனக்கே உடைய சுந்தரேசப் பெருமான், மகிழ்ச்சியுடன் வீற்றிருக்கும்படி மேன்மை மிக்க தனவணிகர்கள் விருப்பத்தினுல் பெரியதாக அமைத்த அழகிய சிறப்புமிக்க திருக்கோயிலில், கருணை பொழிகின்ற கயற்கண்ணம்மை தனது திருமேனியின் இடப் பாகத்தில் இருக்க விளங்குபவனுகிய, மெய்யடியார்கள் உயர்ந்த முத்தி இன்பம் பெறும்படி அருளுகின்ற சிவ சுந்தரேச மேலோனது திருவடிகளை வணங்குவோம்.

4 வாழைஅடி வாழைஎன ஓதும்மொழி
நேர்உணர வாழைவனமே
ஊழியினும் மேல்எழுபு மேவிவளர்
கோவிலினில் ஓகைமிகவே
ஏழ்உலகும் வாழ்வுபெற மீனவிழி
வாமம்உற ஏமம்நிறை(வு)ஆர்
ஆழிஎன வேஅமரும் ஈசபத
தாமரைகள் ஆவிதுணையே.

''வாழையடி வாழை'' என்று கூறுகின்ற முதுமொழியை நேராக உணரும் வண்ணம், ஊழிக் காலத்திலும் மேல் எழுவதாய் வாழைவனம் மேவி வளருகின்ற திருக்கோயிலில் உவகை மிகுந்து, ஏழு உலகமும் வாழ்வுபெறும் பொருட்டு, மீனவிழி அம்மை இடப்பக்கத்திலே பொருந்த, ''இன்பம் நிறைந்த கடல்'' என்று சொல்லும்படி எழுந்தருளி இருக்கின்ற சுந்தரேசப் பெருமானது திருவடித் தாமரைகள் நமக்கு உயிர்த்துணை ஆகும்.

குறிப்பு: ஆத்தன்குடி சிவன் கோவிலில் தலவிருட்சமாக வாழை வனம் இருந்து வருகிறது.

5 வேதம்உறை சீர்ஆத்தன் நாமம்நிறை
வேவாய்ப்ப மேவும் நகர்வாய்ச்
சீதஅரு ளேயார்க்கும் ஈதல்உறும்
மீனாட்சி தேவி இடன்ஆர்
நாதபத நாட்கமலம் மீது(இ)லகு
வேட்கைமிக நாடும் இதுவே
ஏதில்இக வாழ்க்கைதரும் மேதைபர
மோக்கநிலை ஈயும் நிசமே.

வேதம் விளங்குகின்ற, சீரிய ஆத்தனது பெயருக்கு உரிய எல்லாச் சிறப்புக்களும் வாய்க்கும்படி மேவிய நகரத்தில், குளிர்ந்த திருவருளை எல்லோருக்கும் வழங்குகின்ற மீனாட்சிஅம்மை இடப்பாகத்திலே பொருந்திய, சுந்தரேசப் பெருமானது புதுமலர் போன்ற திருவடிகளில் வைக்கின்ற, விருப்பம் மிகுதியாவதற்கு நாடுவதே குற்றம் இல்லாத இக வாழ்க்கையை நல்கும். மேலான பர முத்தி நிலையையும் வழங்கும். இதுவே உண்மை.

6 வேத ஆகமம் ஆதி நூல்உரை
மேன்மை சேர்நெறி சைவமே
சாதல் ஆதிகொள் மாத(வ) ஆதியர்
தாவு சீவர்மெய் எய்வமே
மாது(ஓ)ர் பாகர்அவ் வேத நாயகர்
வாய்மை சார்பர தெய்வமே
ஆத லால்அவர் பாத தாமரை
ஆர்வமே புரி(பு) உய்வமே.

வேத சிவாகமங்கள் ஆதிய உண்மை நூல்களில் உரைக்கப் பெற்ற, மேன்மை மிக்கநெறி சைவமே ஆகும். பிறப்பு முதலீயவற்றைப் பெறுகின்ற திருமால் முதலிய தேவர்கள், கீழான உயிர்கள் என்னும் உண்மையை நிலைநாட்டுவோம். உமையம்மையை ஒரு பாகத்திலே உடைய அந்த வேத நாயகரே, உண்மை சார்ந்த பரம்பொருள் ஆவார். ஆதலால் அவரது திருவடித் தாமரைகளில் விருப்பம் வைத்து இன்பம் பெறுவோம்.

7 மகுட தனவணிகர் வளரும்
வழிவழிநல் மார்க்கம் ஆகிய
நிகம முடிதெளி(வு)என் உரிய
சிவநெறியில் நீக்கு(உ) ருதவர்
அகில சிவதரும வகைசெய்
தொழிலர்இவர் ஆத்தன் நாமநல்
நகர்செய் தளியில்உமை பதியை
அளியின்உளம் நாட்டி வாழ்வமே.

மகுடதன வணிகர்களும் வழி வழியாகப் பேணி ஒழுகிவரும் நன்னெறியாகிய வேதாந்தத் தெளிவு என்னும் மேலான சிவநெறியிலிருந்து விலகாதவர்களும், அனைத்துச் சிவதரும வகைகளையும் செய்கின்ற தொழிலை உடையவர்களும் ஆகிய இவர்கள் ஆத்தன் பெயரை உடைய நல்ல நகரத்தில் அமைத்த திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள உமாநாதனிடம் அன்புள்ளம் கொண்டு வாழுவோமாக.

8 அன்பர் வாழ்வினை இன்ப
மேதரும் அங்கண்ஆளனை ஆத்தனூர்

மன்பி நாகனை மின்சடேசனை
மந்த காசனை மாற்றுசோ

வன்பர் நாசனை நண்பர் நேசனை
மன்றுள் ஈசனை வாய்த்தசீர்

இன்ப ராமகிழ் சுந்தரேசனை
என்றும் ஆதர(வு) ஏத்துவாம்.

மெய்யன்பர்களுக்கு வாழ்வாக விளங்குபவனை, இன்பமே வழங்குகின்ற அழகிய கருணை நோக்கம் உடையவனை, ஆத்தன்குடிக்குத் தலைவனாகிய முத்தலைவேற்படையனை, மின்னலை ஒத்த சடையை உடையவனை, புன்முறுவல் பொலிபவனை பாதுகாவலற்ற தீயவர்களை நாசம் செய்பவனை, நல்லவர்களுக்கு நேசனை, அம்பலத்து ஆடும் ஆண்டவனை, தங்களுக்குக் கிடைத்த சிறப்பினால் இன்பம் அடைந்த பாம்புகளை அணிந்து மகிழும் சுந்தரேசனை எப்பொழுதும் ஆதரவுடன் ஏத்துவோம்.

9 ஆண்டவனும் அடிமைகளும் யாண்டும்விரி
சிவனும்அவ னுற்பல் வாழ்வுசார்ந்(து)

ஈண்டும்அரி அயன்முதலர் ஆம்சுரரும்
எனமறைகள் ஈற்றும் ஓதுமால்

ஆண்டும்அதை அறிவிலர்கள் நாம்பிரமம்
எனல்ஒருவி ஆத்தனூரில் வாழ்

ஈண்டுஉமைதன் இடனில்உறை ஆண்டவனை
அனவரதம் ஏத்தி வாழ்கவே.

ஆண்டவனும் அடிமைகளும் ஆகின்றவர்கள், எங்கும் நிறைந்திருக்கின்ற சிவபெருமானும் அப்பெருமானது பேரருளால் பல நல்வாழ்வுகளை அடைந்து பொருந்திய திருமால், பிரமன் முதலிய தேவரும் என்று, வேதங்கள் இறுதியிலும் ஓதுகின்றன. அங்கே அதனை அறியாதவர்கள், ''நாமே கடவுள்'' என்று கூறுதலைத் தவிர்த்து, ஆத்தன்குடியில் வாழுகின்ற உமையம்மை தனது இடது பாகத்தில் உறையும் ஆண்டவனை, நாள் தோறும் ஏத்தி வாழ்வார்களாக.

10 காவல்புரி செயல்இடர்(உ) ருதுவலி மருவிமுறை
காக்க விழையுமால்

ஆவிவிழி தரவலிய ஆழிதரு பரமன்வளர்
ஆத்தன்நக ரில்வாழ்

தேவிகயல் விழிஉமைஓர் பாகன்உல(கு) உயஅருள்செய்
தீர்த்தன் நிறையவே

ஈவணிகர் இனிதுபுரி கோவில்உறை பரனைநிதம்
ஏத்தல் புரிகுவோம்.

காத்தல் புரிவதாகிய தனது தொழிலுக்குத் தடை வராதபடி, அந்தத் தொழில் வலிமை பொருந்தி முறையாக நிகழ விரும்பிய திருமால், தான் செய்த சிவபூசைக்கு வைத்துக் கொண்ட ஆயிரம் தாமரை மலர்களில் ஒரு மலர் குறைய, அதற்காகத் தாமரை போன்ற தனது கண்ணைப் பெயர்த்துச் சாத்த அவனுக்குவலிமையாகிய சக்கரப் படையை அருளிய முதல்வனும், நன்மை வளருகின்ற ஆத்தன்குடியில் எழுந்தருளியுள்ள அன்னை மீனுட்சி உமையை ஒரு பாகத்திலே கொண்டவனும், உலகம் உய்ய அருள்புரிகின்ற தூயவனும், மிகுதியான கொடையை உடைய தனவணிகர்கள் இனிது அமைத்த திருக்கோயிலில் வீற்றிருக்கின்ற முதல்வனும், ஆகிய சுந்தரேசப் பெருமானைத் தினமும் ஏத்துவோம்.

11 தெய்வசித் தாந்தநெறி உய்யவைத்(து)
ஆண்டுமுறை தேற்றும் ஈசனை
நைவொழித்(து) ஓங்குஇ(ன்)அருள் செய்வதற்(கு)
ஆம்துணையை நாட்டு பாகனை
ஐவரைக் காய்ந்துஅவர்கள் எய்யுரித்(து)
ஆம்தனியை ஆத்த னூரில்வாழ்
சைவனைச் சார்ந்துபணி செய்தலைப்
பூண்டுதுதி சாற்றி வாழ்வமே.

தெய்வநலம் சான்ற சைவ சித்தாந்த நெறியை, மக்கள் உய்வதற்காக வைத்து ஆட்கொண்டு, நெறி முறையைத் தெளிவிக்கும் இறைவனைத் துன்பத்தை ஒழித்து மேலான இனிய அருளைச் செய்வதற்கு உரிய துணையாகிய உமையம்மையை நிலைநாட்டும் ஒரு பாகத்தை உடையவனை, ஐம்பொறிகளாகிய பகைவர்களை அடக்கி அவர்கள் வலிமையை ஒடுக்கி, அருளும் தனிமுதலை, ஆத்தன்குடியில் எழுந்தருளியுள்ள சைவனை அடைந்து அவனுக்குப் பணி செய்தலை மேற்கொண்டு துதித்து வாழுவோம்.

ஆத்தன்குடி மீனாட்சி அம்பிகை
கலித்துறைப் பதிகம்

1 திருமகள் வாணி அயிராணி
ஆதிய தேவியர்தம்
அரிஅயன் இந்திரன் ஆதிய
கேள்வர்நின் அன்பர்பணி
புரிதலின் நின்பணி செய்துதம்
கற்பைப் புலப்படுத்தக்
கருணைசெய்(து) உள்மகிழ் ஆத்தன்
நகர்அங் கயற்கண்ணியே.

திருமகளும் கலைமகளும் இந்திராணியுமாகிய தேவியர்களது, திருமாலும் நான்முகனும் இந்திரனுமாகிய துணைவர்கள், உனது மெய்யன்பர்களுக்குப் பணிவிடை செய்து கொண்டிருப்பதைப் பார்த்து, அம்மங்கையரும் உனது பணியைச் செய்து தமது கற்பை வெளிப்படுத்திக் காட்ட, அவர்களுக்கு நல்லருள் புரிந்து உள்ளம் மகிழ்பவள் ஆத்தன்குடியில் எழுந்தருளியிருக்கும் அங்கயற்கண்ணம்மை ஆகிய நீ.

2 உருஆதி யாவையும் நீயேநின்
நாதர்க்(கு) உதவுதிநீ
அருளால் அவர்தரப் பெற்றுஆங்கு
வாமத்(து) அமர்திறன்என்
தெருளாம் மகளிர்கற்(பு) இன்இயல்
போற்றுதல் தேற்றுதற்கோ
கருமா(சு) இரித்துஅருள் ஆத்தன்
நகர்அங் கயற்கண்ணியே.

பிறவிப் பிணியை ஒழித்து அருள்புரிகின்ற ஆத்தன்குடியில் எழுந்தருளியிருக்கும் அங்கயற் கண்ணம்மையே! உனது கணவராகிய சுந்தரேசப் பெருமானுக்கு உருவம் முதலிய அனைத்தையும் நீயே உதவுகின்ருய். அப்படியிருக்க: அருளினுலே அவரால் தரப்பெற்று அங்கே அவரது இடப் பாகத்தில் நீ அமர்ந்திருக்கும் திறம் என்னே! தெளிவுபெற்ற மங்கையர் கற்பியலைப் போற்றுவர் என்பதைக் காட்டுதற்கோ?

3 பற்பல அண்டப் பகுதிகள்
தந்துஉயிர்ப் பன்மைக்(கு)எல்லாம்

அற்புறு தாய்நீ அவைமுற்றும்
ஓம்பநின் அன்பர்தந்த

நெற்படி யோஇரண்(டு) அன்னதும்
ஓகையில் நீபெற்(று)அமை

கற்பியல் காட்டினை ஆத்தன்
நகர்அங் கயற்கண்ணியே.

ஆத்தன்குடியில் எழுந்தருளியிருக்கும் அங்கயற்கண்ணம்மையே! பலவகைப்பட்ட அண்டப் பகுதிகளை உண்டாக்கி அவற்றில் வாழுகின்ற எல்லா உயிர்த் தொகுதிகளுக்கும் அன்புமிக்க தாயாக விளங்குகின்ற நீ, அவ்வுயிர்களை வாழ்வித்தற்பொருட்டு உன் கணவனுர் தந்த நெல் இரண்டு படி மட்டும்தானே? அதையும் உவப்போடு நீ பெற்று அமைதியுடைய கற்பியலைக் காட்டினுய்.

4 பல்கோடி சீவர்க்கும் நீயே
அ(ன்)னையென்றும் பாலிக்கின்றாய்

நல்கா யெனல்எவன் நான்பா
வியன்எனும் நல்மொழியே

அல்கா நலிவினும் தேற்றிடும்
செம்மணி ஆங்குநண்ப

கல்காட்டும் மாளிகை ஆத்தன்
நகர்அங் கயற்கண்ணியே.

இரவுப் பொழுதையும் நண்பகற் பொழுதாகக் காட்டும் மாளிகைகள் நிறைந்த ஆத்தன்குடியில் எழுந்தருளியிருக்கும் அங்கயற் கண்ணம்மையே! பலகோடி உயிர்த் தொகுதிகளுக்கும் நீயே தாயாவாய். அவ்வுயிர்களை எப்பொழுதும் காத்து வருகின்றாய். நான் பாவியேன் என்றாலும் எனக்கு அருள் வழங்க மாட்டாயென்பதற்கு என்ன காரணம் இருக்கிறது? மிகுதியான துன்பவேளையிலும் நல்ல சொல்லையே கூறித் தேற்றும் உயர்ந்த மணி அல்லவா நீ?

5 நாயகர் தன்நிலைக்(கு) ஏற்புறச்
சார்ந்தமை நல்நிலையே

ஆயிழை யார்கற்(பு) எனல்தேற்றி
ஆவிக்(கு) அருளஅரன்

மேயினன் எவ் எவ் உருவுகொண்(டு)
அவ்அவ் விளைவுக்(கு)இயை

காயம்உற்(று) ஆங்குஅருள் ஆத்தன்
நகர்அங் கயற்கண்ணியே.

கணவரது நிலைமைக்கு ஏற்பப் பொருந்தி அமைகின்ற நல்ல நிலையே மங்கையரது கற்பு என்பதைத் தெளிவித்து உயிர்களுக்கு அருள் புரிவதற்காகச் சிவபெருமான் எவ்வெவ்வுருவங் கொண்டு வருகின்றானோ: அவ்வுருவ விளைவுகளுக்கு இயையும்படி திருமேனி கொண்டுவந்து அங்கே அருளுபவள் ஆத்தன்குடியில் எழுந்தருளியுள்ள அங்கயற்கண்ணம்மை.

6 ஒளியால் உலகம்எ(ல்) லாம்ஈன்ற
தாய்என்(று) உனைமறைகள்
தெளிவாய் உரைக்கும் அதீத
நிலையுறு சின்மயைநீ
அளியார்பொன் மாலை மகள்எனப்
போந்த(து) அருளற்(கு)அன்றோ
களிகூர் திருவளர் ஆத்தன்
நகர்அங் கயற்கண்ணியே.

களிப்பு மிகுந்து திருமகள் வாழுகின்ற ஆத்தன்குடியில் எழுந்தருளியுள்ள அங்கயற் கண்ணம்மையே! பேரொளியினாலே உலகம் அனைத்தையும் பெற்ற தாயென்று உன்னை வேதங்கள் தெளிவு செய்து உரைக்கும். அனைத்திற்கும் அப்பாற்பட்ட நிலையிலுள்ள பேரறிவினளாகிய நீ அன்பு மிகுந்த காஞ்சனமாலையின் மகளாகி வந்து மதுரையம்பதியில் வாழ்வது அருள்புரிவதற்காக அல்லவா?

7 மைந்தரை நல்கி அமு(து)ஆய்ந்(து)
அருத்தி வளர்த்(து)இவர்நின்
தந்தைஎன்(று) ஓர்வித்(து) அவர்பாங்(கு)
அணைவித்தல் தாய்கடன்என்
னும்தகை தேற்(று)உலகு அன்னே
எமைஅரன் ஒண்பதத்து(உ)
கந்து(உ)றச் சேர்த்துஅருள் ஆத்தன்
நகர்அங் கயற்கண்ணியே.

ஆத்தன்குடியில் எழுந்தருளியுள்ள அங்கயற் கண்ணம்மையே! மக்களைப்பெற்று உணவு தேர்ந்து உண்பித்து வளர்த்து, ''இவர் உனது தந்தை'' என்று புலப்படுத்தி அவர் பக்கலில் சேர்ப்பது தாயின் கடமை என்பதைத் தெளிவிக்கின்ற உலகன்னையே! எம்மைச் சிவபெருமானது ஒளி பொருந்திய பதங்களில் உகந்து பொருந்தச் சேர்த்தருளுவாயாக.

8 சீவர்பல் கோடி உடல்கொண்(டு)
உலையும் திசைகள்எங்கும்
ஆவன செய்துஓம்(பு) உல(கு)அன்னை
யேநினை அன்(று)ஓர்புகல்
பூவில்உண் டோஅறி யாச்சிறி
யேமைப் புரந்(து)அருளாய்
காவளர் சீர்திகழ் ஆத்தன்
நகர்அங் கயற்கண்ணியே.

சோலைகள் சூழ்ந்த சிறப்புமிக்க ஆத்தன் குடியில் எழுந்தருளியுள்ள அங்கயற்கண்ணம்மையே! எல்லாத் திசைகளிலும் உடல்கொண்டு உலைகின்ற பலகோடி சீவர்களுக்கும் வேண்டுவனவற்றைச் செய்து காக்கின்ற உலகன்னையே! உன்னையன்றி உலகத்தில் எங்களுக்கு வேறு புகல் உண்டோ? ஏதும் அறியாத சிறியேங்களைக் காத்தருளுவாயாக.

9 சங்கரி அம்பிகை நன்பரை
இன்(பு)அருள் சார்தருண

மங்களை எங்களை ஆள்சிவை
நீள்செவி வார்குழைசேர்

திங்கள்மு கம்பொழி யும்கரு
ணுகரி சென்னிமதி

கங்கையர் பங்(கு)அமர் ஆத்தன்
நகர்அங் கயற்கண்ணியே

சென்னியில் பிறைத்திங்களையும் கங்கையை யும் கொண்ட சிவபெருமானது பங்கிலே அமர்ந்த ஆத்தன்குடியிலே எழுந்தருளியுள்ள அங்கயற் கண்ணம்மை நன்மையைச் செய்பவள், தாய், மிக மேலானவள், இனிய அருள் சார்ந்த இளைய மங்கலம் உடையவள், எங்களை ஆளும் சிவசக்தி. நீண்ட காதுகளில் நெடிய குண்டலங்களை அணிந்த திங்களனைய முகத்திலிருந்து பொழிகின்ற கருணைக் கடல் ஆவாள்.

10 பார்வதி சார்பவர் பாசவி
மோசனி பால்புகலி
ஊர்வதி சேய்உண வேஅருள்
நீஉல(கு) உய்ந்திடவே
சார்வதில் ஆர்வமிக் காய்உனே
நல்(கு)எனச் சாற்றல்என்னும்
கார்வதி பூம்பொழில் ஆத்தன்
நகர்அங் கயற்கண்ணியே.

மேகங்கள் தவழும் பூஞ்சோலேகள் நிறைந்த ஆத்தன்குடியில் எழுந்தருளியுள்ள அங்கயற்கண்ணம்மையே! மலேமகளே! வந்தணேந் தவர்களுக்கு ஆணவம், கன்மம், மாயை ஆகிய பாசங்களே நீக்குபவளே! சீர்காழியில் தோன்றிய திருஞானசம்பந்தச் சேய் உண்ணுதற்குப் பாலமுதை அருளிய நீ உலகம் உய்தி பெறுவதில் ஆர்வம் மிகுந்தவள். உன்னே எங்களுக்கு அருள்செய் என்று வேண்டுவது எதற்காக?

11 கோமளை சாமளை கோமதி
மாமதிக் கோட்(டு)இமய
மாமகள் சோம சடாதரி
மாதவி மாகௌரி
தேமொழி தூமனு நாயகி
தாயகி சீர்அருள்வாய்
காமரு நாமநல் ஆத்தன்
நகர்அங் கயற்கண்ணியே.

மெல்லியலும், பச்சை நிறம் உடையவளும், உயிர்களை அடிமைகளாகக் கொண்டவளும், உயர்ந்த திங்கள் தழுவும் உச்சியை உடைய இமய மலைமகளும், சந்திரனைச் சடையிலே சூடியவளும், பெருந்தவத்தினளும், சிவசக்தியும், தூய அருள் நாத வடிவான முத்தி பஞ்சாக்கரத்திற்குத் தலைவியும், தாயும் ஆகிய, அழகிய பாதுகாவலை உடைய நல்ல ஆத்தன்குடியில் எழுந்தருளியுள்ள அங்கயற்கண்ணம்மையே! எமக்குச் சிறப்பை அருளுவாயாக.

வாழ்த்து

வேதசிவா கமம்வாழி மேதகுவை
திகசைவம் விரிந்து வாழி

பூதிமணி எழுத்(து)ஐந்து போற்றுகுரு
சந்தானம் பொலிந்து வாழி

சீதவளம் தரும்ஆத்தன் திருநகரம்
வணிகர்குலம் சிறந்து வாழி

சோதிதரும் மீனுட்சி சுந்தரே
சுரர்கோயில் சுரந்து வாழி.

வேத சிவாகமங்கள் வாழ்க. மேலான வைதிக சைவம் எங்கும் நிறைந்து வாழ்க. திருநீறு, உருத்திராக்கம், திருவைந்தெழுத்தும் இவற்றைப் போற்றுகின்ற குருபரம்பரையும் பொலிந்து வாழ்க. குளிர்ந்த வளம் வழங்குகின்ற ஆத்தன்குடிப் பதியும், இங்குள்ள தனவணிகர் மரபும் சிறந்து வாழ்க. ஒளிமிக்க மீனுட்சி சுந்தரேசுரர் திருக்கோயில் அருளைச் சுரந்து வாழ்க.

தி சௌத் இந்தியா பிரஸ், காரைக்குடி போன் : 300